நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம்
807, அண்ணா சாலை, சென்னை-2

**சுற்றறிக்கை**

ந.க.எண்.21834/2012/சிபி நாள்.31.05.2013

பொருள்: நகர் ஊரமைப்பு ஆணையர் அலுவலகம், சென்னை-2 - மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி சுற்றுச்சூழல்துறையின் தடையின்மை சான்று பெற நிபந்தனையிடுதல் சம்பந்தமாக.

பார்வை:
1) Ministry of Environment and Forests, Government of India Notification dated:14.9.2006.
2) The Chairman, State Level Environment Impact Assessment Authority D.O.letter No.SEIAA,TN/General/2012, dated:07.2.2013

-------

பார்வை 1-ல் கண்ட மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அறிவிக்கையின்படி நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப இசைவு வழங்கப்படும் உத்தேசங்களில், கட்டிடங்களின் மொத்தப்பரப்பு 20,000 சதுரமீட்டருக்கு மிகும் பட்சத்திலும் மற்றும் மனைப்பிரிவின் பரப்பு 50 ஹெக்டேருக்கு மிகும் பட்சத்திலும் சுற்றுச்சூழல் துறையின் தடையின்மைச் சான்று பெறப்பட வேண்டி கீழ்காணும் நிபந்தனையிடப்பட்டு வருகிறது.

"EIA clearance should be obtained before commencement of the construction"

பார்வை 2-ல் காணும் Chairman, State Level Environment Impact Assessment Authority அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டதற்கிணங்க இனிவரும் காலங்களில் பெறப்படும் உத்தேசங்களில், கட்டிடங்களின் மொத்தப்பரப்பு 20,000 சதுரமீட்டருக்கு மிகும் பட்சத்திலும் மற்றும் மனைப்பிரிவின் பரப்பு 50 ஹெக்டேருக்கு மிகும் பட்சத்திலும் கீழ்காணும் நிபந்தனையினை தொழில்நுட்ப அனுமதி வழங்கும் ஆணையில் விதிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

"The Project proponent/Applicant shall not commence any activity, excepting fencing of the site and construction of temporary shed for guard, without obtaining Environmental Clearance under the EIA Notification, 2006 from the State Level Environment Impact Assessment Authority or the Ministry of Environment and Forests, Government of India, as applicable to the project, as per the threshold limits. Any violation from the above requirement is liable for action under section 19 of the Environment (Protection) Act, 1986".

மேலும், அனைத்து சார்பு அலுவலகங்களிலும் மேற்காணும் இனங்களில் திட்ட அனுமதி/கட்டிட அனுமதி வழங்கப்படும் போது மேற்காணும் நிபந்தனையிட்டு அனுமதி வழங்க அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கையினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்)/-ஆ.கார்த்திக்
நகர் ஊரமைப்பு ஆணையர்

நகல்:
அனைத்து சார்நிலை அலுவலகங்கள்,
அனைத்து தலைமை அலுவலக உதவி இயக்குநர்கள்,
திட்ட உதவியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

03/6/17

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்